## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஒன்பதாம் பத்து

### மூன்றாம் திருமொழி - தன்னை
### திருப்புல்லாணி 1
### [தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாமை மிகுதியால் தலைவனிடம் செல்லத் துணிந்து நெஞ்சையும் தோழியையும் துணை வேண்டிய பாசுரம்]

** தன்னை நைவிக்கிலென் * வல்வினையேன் தொழுதும் எழு *
பொன்னை நைவிக்கும் * அப்பூஞ்செருந்தி மண நீழல் வாய் **
என்னை நைவித்து * எழில் கொண்டு அகன்ற பெருமான் இடம் *
புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து * அழகாய புல்லாணியே 1

உருகி நெஞ்சே! நினைந்து இங்கு இருந்தென்? * தொழுதும் எழு *
முருகு வண்டுண் மலர்க் கைதையின் நீழலில் * முன்னொரு நாள் **
பெருகு காதன்மை * என் உள்ளம் எய்தப் பிரிந்தான் இடம் *
பொருது முந்நீர்க் கரைக்கே * மணி உந்து புல்லாணியே 2

ஏது செய்தால் மறக்கேன்? * மனமே! தொழுதும் எழு *
தாது மல்கு தடம் சூழ் பொழில் * தாழ்வர் தொடர்ந்து ** பின்
பேதை நினைப் பிரியேன் இனி * என்று அகன்றான் இடம் *
போது நாளும் கமழும் * பொழில் சூழ்ந்த புல்லாணியே 3

கொங்குண் வண்டே கரி ஆக வந்தான் * கொடியேற்கு * முன்
நங்கள் ஈசன் * நமக்கே பணித்த மொழி செய்திலன் **
மங்கை நல்லாய்! தொழுதும் எழு * போய் அவன் மன்னும் ஊர் *
பொங்கு முந்நீர்க் கரைக்கே * மணி உந்து புல்லாணியே 4

உணரில் உள்ளம் சுடும் ஆல் * வினையேன் தொழுதும் எழு *
துணரி ஞாழல் நறும் போது * நம் சூழ் குழல் பெய்து ** பின்
தணரில் ஆவி தளரும் என * அன்பு தந்தான் இடம் *
புணரி ஓதம் பணிலம் * மணி உந்து புல்லாணியே 5

எள்கி நெஞ்சே! நினைந்து இங்கு இருந்தென்? * தொழுதும் எழு *
வள்ளல் மாயன் * மணிவண்ணன் எம்மான் மருவும் இடம் **
கள் அவிழும் மலர்க் காவியும் * தூமடல் கைதையும் *
புள்ளும் அள்ளல் பழனங்களும் சூழ்ந்த * புல்லாணியே 6

பரவி நெஞ்சே! தொழுதும் எழு * போய் அவன் பாலமாய் *
இரவும் நாளும் இனிக் * கண் துயிலாது இருந்தென் பயன்? **
விரவி முத்தம் * நெடு வெண்மணல் மேல் கொண்டு * வெண்திரை
புரவி என்னப் புதம் செய்து * வந்துந்து புல்லாணியே 7

அலமும் ஆழிப் படையும் உடையார் * நமக்கு அன்பராய் *
சலம் அதாகித் தகவொன்றிலர் * நாம் தொழுதும் எழு **
உலவு கால் நற்கழி ஓங்கு * தண்பைம்பொழில் ஊடு * இசை
புலவு கானல் * களிவண்டினம் பாடு புல்லாணியே 8

ஓதி நாமம் குளித்து உச்சி தன்னால் * ஒளி மாமலர் *
பாதம் நாளும் பணிவோம் * நமக்கே நலம் ஆதலில் **
ஆது தாரான் எனிலும் தரும் * அன்றியும் அன்பராய் *
போது மாதே! தொழுதும் * அவன் மன்னு புல்லாணியே 9

** இலங்கு முத்தும் பவளக் கொழுந்தும் * எழில் தாமரை *
புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து * அழகாய புல்லாணி மேல் **
கலங்கல் இல்லாப் புகழான் * கலியன் ஒலி மாலை *
வலங்கொள் தொண்டர்க்கு இடம் ஆவது * பாடில் வைகுந்தமே 10

**அடிவரவு:** தன்னை உருகி ஏது கொங்கு உணரில் எள்கி பரவி அலம் ஓதி இலங்கு காவார்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---